
■ வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் இடையே, கவுரி ஆசிரமம் நிலையத்தில் இருந்து திருவொற்றியூர் செல்லும் பாதையில், பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள்.

# 'விறுவிறு!'

- விம்கோ நகர் வரை மெட்ரோ ரயில் திட்ட பணிகள்...
- 2020 மார்ச்சில் சோதனை; ஜூனில் போக்குவரத்து

- நமது நிருபர் -

**சென்னை மெட்ரோ ரயில், முதல்கட்ட விரிவாக்க திட்டத்தில், வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன. இந்த வழித்தடத்தில், 2020 மார்ச்சில் சோதனை ரயில் இயக்க, மெட்ரோ நிர்வாகம் திட்டமிட்டுள்ளதால், எஞ்சியுள்ள பணிகளை, விரைவாக முடிக்க ஒப்பந்ததாரர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.**

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

### எட்டு நிலையம்

இந்த முதற்கட்ட திட்டத்தின், நீட்டிப்பாக, வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, 9.02 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணி, 2016 ஜூலையில் துவங்கியது.

வண்ணாரப்பேட்டையில் இருந்து, தியாகராயர் கல்லூரி – கொருக்குப்பேட்டை வரை, 2.3 கி.மீ., துாரத்திற்கு இப்பாதை, சுரங்கத்தில் அமைகிறது.

கொருக்குப்பேட்டையில் இருந்து, திருவொற்றியூர் விம்கோ நகர் வரை, 6.9 கி.மீ., துாரத்திற்கு, தரைக்கு மேல் மேம்பாலத்தில் பாதை அமைகிறது.

இந்த விரிவாக்க திட்டத்தில், மொத்தம், எட்டு நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

இப்பாதை பணியில், வண்ணாரப்பேட்டை – தியாகராயர் கல்லூரி, – கொருக்குப்பேட்டை இடையே, சுரங்கப்பாதை பணி முடிந்து, நிலைய கட்டுமான பணி, 50 சதவீதம் முடிந்துள்ளது.

சுரங்கப்பாதையில், தண்டவாளம் அமைக்கும் பணிக்கான, ஆயத்த பணிகள் நடந்து வருகின்றன.

கொருக்குப்பேட்டை – தண்டையார்பேட்டை இடையே, மேம்பால துாண்களில், 'கான்கிரீட் டெக்' அமைக்கும் பணி நடந்து வருகிறது.

சுங்கச்சாவடி, தாங்கல், கவுரி ஆசிரமம், திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, துாண்களை, 'கான்கிரீட் டெக்' வாயிலாக இணைக்கும் பணி முடிந்து விட்டது.

### துரிதம்

உயர்மட்ட பாதையில், மேம்பாலத்தில் நிலையங்கள் கட்டப்பட உள்ளதால், தரையில் இருந்து, படிகள் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

விம்கோ நகரில், ரயில்வே பணிமனை அமைப்பதற்கான பணிகள் நடந்து வருகின்றன. இப்பாதை பணி குறித்து, மெட்ரோ ரயில் கட்டுமான பிரிவு அதிகாரி ஒருவர் கூறியதாவது:

முதற்கட்ட விரிவாக்க திட்டத்தில், எஞ்சியுள்ள பணிகளை, ஒப்பந்ததாரர்கள் விரைவாக முடிக்க, திட்ட அதிகாரிகளின், ஆய்வு கூட்டத்தில் முடிவு செய்து, ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனால், இரவு, பகலாக பணிகள் நடந்து வருகின்றன. மூன்று நாட்கள் செய்ய வேண்டிய வேலையை, ஒரே நாளில் முடிக்கும் வகையில், ஒப்பந்த நிறுவனங்கள் திட்டமிட்டு, பணிகளை துரிதப்படுத்தியுள்ளன.

இதனால், இப்பாதை கட்டுமான பணிகள், 2020 மார்ச்சில் முடிக்கப்படும்.

### ஒப்பந்தம்

மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கு, தற்போது, 42 ரயில்கள் உள்ளன. இதில், 35 ரயில்கள், போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஏழு ரயில்கள், கோயம்பேடு பணிமனையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கோளாறு ஏற்படும் பட்சத்தில், மாற்றாக, இந்த ஏழு ரயில்களும் சுழற்சி முறையில், பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே இயக்கப்படும் ரயில்களில், தினமும், 1 லட்சம் பயணியருக்கு மேல் பயணம் செய்கின்றனர்.

வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் வரை நீட்டிக்கப்படும் போது, பயணியர் வருகை, மேலும் அதிகரிக்கும். கூடுதல் ரயில்கள் இயக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இதற்காக, பிரான்ஸ் நாட்டை சேர்ந்த, 'ஆல்ஸ்டாம்' நிறுவனத்தில் இருந்து, 10 ரயில்களுக்கான, 40 பெட்டிகள் வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இந்நிறுவனத்திற்கு, பிரேசில் நாட்டில் உள்ள தொழிற்சாலையில் இருந்து, ரயில் பெட்டிகளுக்கான பாகங்கள், கப்பலில், சென்னைக்கு கொண்டு வரப்பட்டு, ஆந்திர மாநிலம், ஸ்ரீசிட்டியில் உள்ள, 'ஆல்ஸ்டாம்' நிறுவனத்தில் ஒருங்கிணைக்கும் பணி நடந்து வருகிறது.

இப்பெட்டிகள், 2020 மார்ச்சுக்குள், சென்னை, கோயம்பேடு மெட்ரோ ரயில் பணிமனைக்கு வந்துவிடும்.

### மூன்று மாதம்

வரும், 2020 மார்ச்சில், வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நடைபெறும்.

மூன்று மாதங்கள் வரை, சோதனை ஓட்டம் நடக்கும். அதன் பின், ஜூனில், இப்பாதையில், பயணியர் போக்குவரத்து துவங்கப்படும். இதில், எந்த தாமதமும் ஏற்படாது.

இவ்வாறு, அந்த அதிகாரி கூறினார்.


■ வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் இடையே, அகஸ்தியா திரையரங்கம் அருகே நடந்து வரும் மெட்ரோ ரயில் சுரங்கப்பாதை பணி.


■ தியாகராயர் கல்லூரி ரயில் நிலையம்.


■ கொருக்குப்பேட்டை ரயில் நிலையம்.